**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர், தேதி: 17.07.2025
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் ஹார்ட்டி உத்சவ் 2025

கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் **ஹார்ட்டி உத்சவ்** 2025 ஜீலை 17, 2025 அன்று மிக பிரம்மாண்டமாக கொண்டாடப்பட்டது. கனவுகளை விதைத்து, வெற்றியை அறுவடை செய்வோம் என்ற கருப்பொருளை ஏற்று பண்பாட்டு, படைப்பாற்றல் மற்றும் இளமையின் துடிப்பான ஆற்றலை மையமாகக் கொண்டு இவ்விழா அமைத்தது. இவ்விழாவின் நோக்கமான நிலத்தில் தொடங்கி அறுவடை வரை என பல்வேறுபட்ட நடைமுறைகளை பறைசாற்றும் வகையில் இந்நிகழ்வில் மாநிலம் முழுவதும் உள்ள தோட்டக்கலை கல்லூரிகளான பெரியகுளம், திருச்சி, பையூர், கலவை மற்றும் செம்பட்டி ஆகியவற்றில் இருந்து 250 மாணவ மாணவியர் போட்டியாளர்களாக கலந்து கொண்டு தங்களின் திறமைகளை வெளிப்படுத்தினர். நவீன வாழ்வாரதாத்திற்கு வித்திடுடவும் தொழில்முனையவும் படைப்பாற்றலைத் தூண்டவும், மாணவர்கள், அறிஞர்கள் மற்றும் உழவு சமூகங்களிடையே ஒருமைப்பாட்டை வளர்க்கவும் இவ்விழா கொண்டாடப்பட்டது.

பொறுப்பு துணைவேந்தர் மற்றும் பதிவாளருமான முனைவர் இர. தமிழ்வேந்தன் அவர்கள் விழாவிற்கு தலைமை தாங்கி தொடங்கி வைத்தார். அவர்தனது தலைமையுரையில் பாரம்பரிய மற்றும் நவீன தொழில்நுட்பங்கள் இணைந்த தோட்டக்கலை வேளாண்மை வளர்ச்சி ஒரு முக்கிய பங்காளிப்பாக உள்ளது என்று கூறனார்.

தோட்டக்கலைத்துறை முதன்மையர் முனைவர் க. வெங்கடேசன் அவர்கள் விழாவில் பங்கேற்ற மாணவர்களுக்கு அவர்களது படிப்பு மட்டும் திறமைகளை வளர்க்கும் உத்திகளை எடுத்துரைத்தார். இந்நிகழ்வில் பையூர் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் முதன்மை அலுவலர் முனைவர் மு.சை. அனிசாராணி , கலவை ஆதிபராசக்தி தோட்டக்கலைக் கல்லூரியின் முதல்வர் முனைவர் கோ. உமாபதி, ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் குழுமத்தின் ஆராய்ச்சி திட்ட ஒருங்கினைப்பாளர் முனைவர். போ. அகஸ்டின் ஜெரார்ட் கல்வி மற்றும் பண்பாட்டு திறமைகளை கொண்டாடுதலோடு மட்டுமல்லாமல், தோட்டக்கலைத் துறையில் பாரம்பரியத்தையும் புதுமையையும் இணைக்கும் ஒரு நிகழ்வை ஏற்பாடு செய்ததற்காக பாராட்டினர்.

*இவ்விழாவின் சிறப்பம்சமாக புதிய தோட்டக்கலை மாதிரிகளுடன் கூடிய கண்காட்சி அமைத்து இதில் மாணவாகள் வடிவமைத்த தொழில்நுட்ப காட்சி மாதிரிகளை காட்சிப்படுத்தியிருந்தனர். ஒருங்கிணைந்த செங்குத்துத் தோட்ட மாதிரிகள், நீர் ஊடக தாவர வளர்ப்பு (ஹைட்ரோபோனிக்ஸ்) அமைப்புகள் மாடி மற்றும் வீட்டுத் தோட்ட மாதிரிகள் அறுவடைக்கு பிந்தைய தொழில்நுட்பக கருவிகள், மதிப்பு கூட்டலுக்கான பதப்படுத்தும் அலகுகள் மற்றும் நிலையான நீர்ப்பாசன மாதிரிகள் போன்றவை இருந்தன. ஒவ்வொரு காட்சிப்பொருளும் வேளாண்மை உற்பத்தித்திறனை மேம்படுத்துதல், சுற்றுச்சூழல் மாசுபாட்டைக் குறைத்தல், கழிவுகளைக் குறைத்தல் மற்றும் தொழில்முனைவோர் முயற்சிகளுக்கான வழிகளைக் கானும் வகையில் மாணவர்களின் திறனைப் பிரதிபலித்தது.*

*இந்நிகழ்ச்சியில் பிரம்மாண்டமாக தோட்டக்கலையின் பன்முகத்தன்மையையும் துடிப்பையும் பிரதிபலிக்கும் வகையில் அனைத்து தோட்டக்கலைக் கல்லூரிகளுக்கிடையே மொத்தம் 21 விதமான பண்பாட்டு போட்டிகள் நடத்தப்பட்டன. இந்நிகவில் நடனக்களரி, தனிநடனம், தோட்டக்கலை வினாடி வினா, பழா சிற்பம் மற்றும் நில வரைபடம் தயாரித்தல் போன்றவையும் நடத்தப்பட்டன. மேற்கண்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கி சிறப்பிக்கபட்டது.*

**மக்கள் தொடர்பு அலுவலர்**